சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 04.02.2020

## அவசரக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, விகாரி வருடம் தை மாதம் 21–ஆம் நாள் (பிப்ரவரி திங்கள் 06–ஆம் நாள்:– 04.02.2020) செவ்வாய் கிழமையன்று பிற்பகல் 03.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

## பொருள் எண்.01

14ஆம் மத்திய நிதிக்குழுவின் 2019–2020ம் ஆண்டிற்கான முதல் தவணை மான்ய திட்டத்தின் கீழ் குடிநீர்க் குழாய் Internal Plumping பணிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளின் காரணமாக சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிக்கு ரூ.161.15 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி 4 பணிகளுக்கு 28.01.2020–ஆம் அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>1) அண்ணாமலைநகர் மெயின் ரோடு மற்றும் அண்ணாமலைநகர் குறுக்குத் தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைக்கும் பணி–மதிப்பீடு ரூ.35.00 இலட்சம்</u>**

1. திரு.D.தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி – 4.99 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்
2. திரு.R.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 6.69 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

**<u>2) மயானம் சாலை (மேற்கு பகுதி) தடுப்பு சுவருடன் கூடிய தார்ச்சாலை அமைக்கும் பணி மற்றும் லெட்சுமி நகரில் தார்ச்சாலை அமைக்கும் பணி– மதிப்பீடு ரூ.50.00 இலட்சம்</u>**

1. திரு.D.தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி – 4.98 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்
2. திரு.R.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 6.69 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

**<u>3) முத்தாலம்மன் கோவில் ரோடு மற்றும் சிவராமன் தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைக்கும் பணி – மதிப்பீடு ரூ.48.00 இலட்சம்</u>**

1. திரு.D.தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி – 4.98 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்
2. திரு.R.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 5.42 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

**<u>4) பொன்னகர் மற்றும் ராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்ச்சாலை அமைக்கும் பணி – மதிப்பீடு ரூ.28.15 இலட்சம்</u>**

1. திரு.D.தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி – 4.98 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்
2. திரு.R.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 5.66 சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதல்

**அலுவலகக் குறிப்பு:–** 14–ஆம் மத்திய நிதிக்குழு திட்டம் 2019–20ன் கீழ் மேற்கண்ட விவரப்படி 4 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன்படி வரிசை எண்.1, 2,3 மற்றும் 4க்கு முறையே **4.99% மற்றும் 4.98% சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ளதால், மேற்படி ஒப்பந்ததாரரிடம் பேரப் பேச்சு கடிதம் (Negotiation Letter) வழங்கக்கோரி 30.01.2020–இல் கடிதம் அனுப்பியமைக்கு, சாலைப் பணிகளுக்கான மூலதனப் பொருட்கள் விலையுயர்வு மற்றும் தொழிலாளர் கூலி உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலையினை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். (ந.க.எண்.0043/2020/இ1).**

**தீர்மான எண், நாள்** **801, நாள்.04.02.2020**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.02**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான அம்மா உணவகத்தில் உணவு சமைக்கும் அடுப்பு, பர்னர், கேஸ் லைன் மற்றும் பாயிலர் ஆகியவை பழுதடைந்துள்ளது. எனவே மேற்படி பழுதுகளை பொது மக்களின் நலன் கருதி சரி செய்ய ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.19000/–க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது–

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0074/2020/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **802, நாள்.04.02.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.03**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகன எண்.TN603761க்கு வருடாந்திர காப்பீடு 20.02.2020–ஆம் தேதியுடன் முடிவடைகிறது. மேலும் ஒரு வருட காலத்திற்கு (21.02.2020 முதல் 20.02.2021 வரை) காப்பீடு புதுப்பிப்பு செய்வதற்கு, தொகை ரூபாய் 37606/–ஐ யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0324/2014/இ2)** |
| **தீர்மான எண், நாள்** | **803, நாள்.04.02.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.04**

இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 2018–2019–ஆம் நிதியாண்டிற்கு பொங்கல் தற்காலிக மிகை ஊதியம் வழங்க வரப்பெற்ற அரசாணை எண்.2, நிதி (படிகள்) துறை, நாள்.06.01.2020 மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.0051/2020/சி1)** |
| **தீர்மான எண், நாள்** | **804, நாள்.04.02.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.05**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN60W1755 என்ற டம்பர் பிளேசர் வாகனத்திற்கு 2020–2021–ஆம் ஆண்டிற்கான காப்பீட்டு பிரிமியத் தொகை ரூ.40308/–ஐ தேனி யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த பட்டியல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து மேற்படி தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.** |

2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண்.0308/2018/எச்1)

**தீர்மான எண், நாள்** 805, நாள்.04.02.2020

**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.06**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகன எண்.TN60W1755 என்ற டம்பர் பிளேசர் வாகனத்திற்கு தகுதிச் சானறு பெரும் பொருட்டு சில மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.100000/–க்கு நகர்மன்ற தீர்மான எண்.744, நாள்.13.11.2019–இல் நிர்வாக அனுமதி பெற்றதை தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு 09.12.2019–ஆம் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதி பெரும் பொருட்டு வைக்கப்படுகிறது.

1. சிவகாமி ஆட்டோ ஒர்க்ஸ், மெயின் ரோடு, சின்னமனூர் – ரூ.99600/–
2. நேஷனல் பாடி பில்டிங் லேபர் ஒர்க்ஸ், சின்னமனூர் – ரூ.102300/–

**அலுவலகக் குறிப்பு:–**

1. குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்குவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3086/2019/எச்1)

**தீர்மான எண், நாள்** 806, நாள்.04.02.2020

**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.07**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24, லெட்சுமி நகரில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 27.12.2019ம் அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 0.10% சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு.
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 0.083% சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:–** குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.10%) திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4765/2019/இ1).

**தீர்மான எண், நாள்** 807, நாள்.04.02.2020

**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.08**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தேவர் நகர் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் உள்ள கழிப்பிடங்களில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள **31.01.2020**ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 0.15% சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு.
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் –0.20% சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.15%) திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0050/2020/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **808, நாள்.04.02.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.09**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஜெட்ராடிங் வாகன வண்டி எண்.TN60S2193க்கு வருடாந்திர காப்பீடு 20.02.2020ம் தேதியுடன் முடிவடைகிறது. மேலும் ஒரு வருட காலத்திற்கு (21.02.2020 முதல் 20.02.2021 வரை) காப்பீடு புதுப்பிப்பு செய்வதற்கு, உத்தேச தொகை ரூ.42972/–யை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.6437/2018/இ2)** |
| **தீர்மான எண், நாள்** | **809, நாள்.04.02.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 42305 மக்கள் தொகையும், 11712 குடியிருப்புகளையும் கொண்டதாக உள்ளது. மேற்படி குடியிருப்புகளில் 10505 குடியிருப்புகள் தனி நபர் கழிப்பிட வசதி உள்ளது. மேலும், பொது மக்களின் வசதிக்காகவும் சுற்றுப்புறச் சூழரை பாதுகாக்கவும் 2016 ஆம் வருடத்திய திடக்கநநவ மேலாண்மை விதிகளின்படி, இந்நகராட்சி பகுதியில் பொது சுகாதாரப் பிரிவின் மூலம் 27 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதோடு அனைத்து குடியிருப்புகளிலும் 150க்கும் மேற்பட்ட நிரந்தர மற்றும் ஒப்பந்த துப்புரவுப் பணியாளர்கள் மூலம் திடக்கழிவுகளை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரரவ மற்றும் தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்திரவுப்படியும், மறு சுழற்சிக்கு பயன்படும் வகையில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக பிரித்து பெறப்பட்டு மக்கும் குப்பைகளை நகராட்சியின் ஐந்து மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள (MCC) நுண்ணுயிர் கூடத்தில் சேர்த்து உரமாக்கும் பணியை கடந்த 15.01.2020 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் கடந்த 17.01.2020ம் அன்று அரசியல் கட்சிகள் மற்றும் சமூக நலன் விரும்பிகள் இவ்வாறு செய்வதன் மூலம் அருகில் இருக்கும் குடியிருப்புகளுக்கு பகல் மற்றும் இரவு நேரங்களில் குப்பை கழிவுகளின் மூலம் துார்நாற்றம் வீசுவதாக தெரிவித்ததோடு இயக்கக்கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தனர். இந்நிலையில் இது சம்மந்தமான விசயத்தை காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது. அவர்களின் அறிவுரைப்படி, சம்மந்தப்பட்ட நபர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி இனி வரும் காலங்களில் துார்நாற்றம் வீசாத வகையில் கிருமிநாசினி மற்றும் லெமன் கிராஸ் போன்றவற்றை நுண்ணுயிர் கூடத்தில் பயன்படுத்துவதன் மூலம் ஈக்கள் மற்றும் கிருமிகள் உற்பத்தியாவதை தடுக்க இயலும். அதன் மூலம் துார்நாற்றத்தை முற்றிலும் தவிர்க்க முடியும் என்ற உத்திரவாதம் அளிக்கப்பட்ட பின்பு பேச்சு வார்த்தை சுமூகமாக முடிந்தது. எனவே, தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்திரவுப்படி, நுண்ணுயிர் கூடம் இயக்கப்பட வேண்டும் என்பதாலும் தினந்தோறும் குடியிருப்புகளில் இருந்து சேகரித்து பிரிக்கப்பட்ட மக்கும் குப்பைகளின் மூலம் உரமாக்கும் பணியை செய்ய வேண்டிய அவசர அவசிய அத்தியாவசிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாலும் வரும் காலங்களில் நகராட்சி நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் வருகையின் போது நுண்ணுயிர் கூடம் இயங்குவதை பார்வையிடும் சூழ்நிலை உள்ளது. எனவே, நுண்ணுயிர் கூடத்தினால் பொது மக்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக நலன் விரும்பிகளிடமிருந்து புகார்கள் வராத வண்ணம் பணியாற்ற வேண்டியுள்ளதால் 100 லிட்டர் லெமன்கிராஸ் வாங்கி வழங்கவும் அதற்கு உத்தேச செலவினம் ரூ.600000/– (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0459/2020/எச்1)**
**தீர்மான எண், நாள்** **810, நாள்.04.02.2020**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 42305 மக்கள் தொகையும், 11712 குடியிருப்புகளையும் கொண்டதாக உள்ளது. மேற்படி குடியிருப்புகளில் 10505 குடியிருப்புகள் தனிநபர் கழிப்பிட வசதி உள்ளது. மேலும், பொது மக்களின் வசதிக்காகவும், சுற்றுப்புறச் சூழரை பாதுகாக்கவும், திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி, இந்நகராட்சி பகுதியில் பொது சுகாதாரப் பிரிவின் மூலம் 27 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சி பகுதிகளில் உள்ள 19 சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 5 பொதுக்கழிப்பிடஙகளை மகளிர் சுய உதவிக் குழுக்கள், நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் மூலம் கண்கானிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் Swachh Bharat Mission மூலமாக ஆய்வு செய்யப்பட்டு திறந்த வெளியில் மல ஜலம் கழிப்பதில்லை என்று கடந்த 16.05.2019 ஆம் தேதியன்று ODF Free Town என்று Declaration செய்யப்பட்டது. இந்நிலையில் மீண்டும் இந்நகராட்சி பகுதியில் ODF ++ என்ற ஆய்வினை மேற்கொள்ள உள்ளதால் மேற்கண்ட பகுதி மற்றும் கோயில், மசூதி, சர்ச், பேருந்து நிலையம், பொது இடஙகளில் தொற்று நோய்கள் பரவுவதை தடுக்கும் வண்ணம் மேலும் பொது சுகாதாரத்தை பாதுகாக்கும் வகையில் நீர்த்த சுண்ணாம்புத் தூள் போட வேண்டியுள்ளது. எனவே, அவசரம் மற்றும் அவசியம், பொது மக்களின் புகார்களை களையும் வண்ணம் தேவையான அளவு நீர்த்த சுண்ணாம்புத் தூள் வாஙக ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0458/2020/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **811, நாள்.04.02.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சியின் குடிநீர்ப் பிரிவு செலவு வரவினை காட்டிலும் கூடுதலாக உள்ளதால், மின் கட்டணம் செலுத்துவதற்குக்கூட குடிநீர்க் கட்டண வரவு பற்றாக்குறையாக உள்ளதை கருத்தில் கொணடு, நகராட்சியில் நடைமுறையில் உள்ள குடிநீர் மாதாந்திர கட்டணத்தினை உயர்வு செய்ய இந்நகர்மன்றத்தின் 31.05.2018–ஆம் நாளிட்ட 399–ஆம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி குடிநீர் கட்டணங்களை திருத்தியமைப்பதற்கு குடிநீர் விநியோக உபவிதிகளில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள (Necessary Amendments in Water Supply Bye-Laws) சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் 30.04.2019–ஆம் நாளிட்ட ந.க.12404/2017/கு.வ.3 எண் செயல்முறைகளில் பொது அங்கீகாரம் (General Approval) சில நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்பட்டது.

மேற்படி பொது அங்கீகாரத்தில் அனுமதி வழங்கப்பட்ட கீழ்க்கண்ட இனங்களுக்கு திருத்திய பொது அங்கீகாரம் (Revised General Approval) வழங்க சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

## ஏற்கனவே வழங்கப்பட்ட பொது அங்கீகாரத்தில் உபவிதிகளில் சேர்க்கப்பட வேண்டிய விவரங்கள்

| | |
|---|---|
| 12 (ஈ) தண்ணீர் வரி (Water Cess)<br>மூன்று மாதத்திற்கு கட்டணம் ரூ.5/– தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்துவதற்காக. | 12(d) Water Cess<br>Charges for 3 months Rs.5/- for remittance to Tamilnadu Pollution Control Board. |
| 13 (ஈ) **(i)** நிர்ணயிக்கப்பட்ட குடிநீர்க் கட்டணம் குறிப்பிட்ட காலத்தில் அதாவது காலாண்டு முடிவு பெற்ற அடுத்த மாதத்தின் 20–ஆம் தேதிக்குள் செலுத்தாத இணைப்பிற்கு தவணை ஒன்றுக்கு ரூ.50/– அபராத கட்டணமாக வசூல் செய்யப்படும். | **13**(d) **(i)** For delayed payment of water charges in the prescribed time limit (ie) 20th day of the next month of completed quarterly period a sum of Rs.50/- will be collected as penalty, in each instalment. |

**அலுவலகக் குறிப்பு:–** மேற்கண்டவாறு திருத்தம் செய்து சேர்க்கப்பட வேண்டிய உபவிதிகளுக்கு திருத்திய பொது அங்கீகாரம் (Revised General Approval) வழங்க, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண், நாள்** 812, நாள்.04.02.2020

**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.13**

சின்னமனூர் நகராட்சி பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் (SBM) கீழ் திறந்த வெளியில் மலம் ஜலம் கழித்தல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. இந்நகரில் உள்ள நச்சுத் தடை தொட்டி (Septic Tank) கழிவு நீரை கால்வாயில் விடுதல் அற்ற நகரமாக ODF++ அறிவிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் பொது மக்களிடம் தெரிவிக்கும் பொருட்டு அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.12348/—ஐ சரணம் அய்யப்பா பிரின்ஸ் மற்றும் பப்லிசர் என்ற நிறுவனத்திற்கு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1238/2015/எச்1)**

**தீர்மான எண், நாள் — 813, நாள்.04.02.2020**

**தீர்மானம் — அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.14**

இந்நகராட்சியின் தலைமை நீரேற்றத்தில் இயங்கி வரும் 140KVA ஜென்செட்—க்கு புதிய மின் கலப் பெட்டி (Battery) வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.18000/—க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.6381/2012/இ2)**

**தீர்மான எண், நாள் — 814, நாள்.04.02.2020**

**தீர்மானம் — அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.15**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2018—2019ஆம் நிதியாண்டில் நடைபெற்ற திட்டப்பணிகளை தமிழ்சுடர் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு M/s ESS ESS Publications, Madurai அவர்களுக்கு தொகை ரூ.10000/— வழஙக மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0248/2019/இ1)**

**தீர்மான எண், நாள் — 815, நாள்.04.02.2020**

**தீர்மானம் — அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.16**

இந்நகராட்சி குடிநீர் விநியோகப் பணியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் Head works, Filter Bed, Tank Operator மற்றும் Leak பணிகள் போன்றவற்றை கவனிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது 2019 மார்ச் முடிய மதிப்பீட்டுத் தொகை முடிவடைவதால், ஏப்ரல் 2020 முதல் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1450/2012/இ2)** |
| **தீர்மான எண், நாள்** | **816, நாள்.04.02.2020** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******